BDB-1-TA

# வேதாகமத்தை மதிப்பிழக்க செய்யும்படியான போராட்டம் – நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், பலருக்கும் உண்டாயிருக்கும் கேள்வி புதிய ஏற்பாட்டை தங்கள் கரங்களில் கிடைக்கப்பெறும் முன்பு ஆதி கிறிஸ்தவர்களிடம் காணப்பட்ட உண்மையான விசுவாசம் எப்படிப்பட்டதாக இருந்தது ? புதிய ஏற்பாட்டு நூல்கள் எழுதப்பட்ட போது எது புதிய ஏற்பாட்டு கேனனில் இணைக்கப்படவேண்டும் என்று எப்படி தெரிந்தது, எந்த புத்தகங்களை புதிய ஏற்பாட்டு கேனனில் இணைக்க வேண்டும் எது சேர்க்கப்பட கூடாது என்று எப்படி தெரிந்துகொண்டார்கள்? இன்றைக்கு இந்த விசேஷித்த ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில் அதை கண்டறிந்திட இருக்கிறோம்.

***

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். இப்போது புதிய ஏற்ப்பாடு தொகுப்பில் இருக்கிற 27 புத்தகங்களை ஆதிகால கிறிஸ்தவர்கள் எப்படி தேர்வு செய்து இருப்பார்கள்? நீங்கள் பலவித தொலைக்காட்சி நிகழ்சிகளை பார்த்திருப்பீர்கள், பல புத்தகங்களை வாசித்திருக்கலாம், இந்த தகவல்கள் அனைத்தும் எப்படி நம்மை வந்து சேர்ந்தது என்று விளக்கமளிக்கும் நிகழ்சிகளை நீங்கள் பார்த்திருக்க கூடும். சிலர் கிறிஸ்தவர்கள் கூறிய மூல உபகரணங்களை நாம் இழந்துவிட்டோம் என்கின்றனர், மேலும் கான்ஸ்டன்டைன் நான்காம் நூற்றாண்டில் புதியவைகளை வேதபாரகர்களை வைத்து எழுதியாக சொல்கின்றனர். மற்றவர்களுடைய கருத்து என்னவென்றால், அந்த அளவிற்கு மோசமாக போகல, ஆனா நம்மிடம் இருப்பது அவ்வளவு தெளிவாக இல்லை. இந்த நபர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறோம், இவர்கள் உலகின் பிரதிபெற்ற முன்னிலையிலுள்ள மேதைகள், இதை கேட்டுகொண்டிருக்கிற மாணவர்களுக்கு நீங்கள் எப்படிப்பட்ட பதிகளை வைத்திருக்கிறீர்கள்.

டேரல் பாக் டல்லாஸ் தியோலஜிகள் செமினரியில் புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி பேராசிரியராக இருக்கிறார். இன்று நமது நிகழ்ச்சியில் அவரை கவனமாக பாருங்கள் அப்போது, இவர் ABC மற்றும் NBC மற்றும் FOX மற்றும் CNN போன்ற சானல்களில் இயேசுவை குறித்து வரலாற்று சிறப்பம்சங்களை பற்றி சொல்கிறவர் என்பதை அறிவீர்கள். அடுத்த Dr. டேனியேல் B. வால்லேஸ் டல்லாஸ் தியோலஜிகள் செமினரியில் புதிய ஏற்பாட்டு பாடபிரிவின் பேராசிரியர். இவர் புதிய ஏற்பாட்டின்

கிரேக்க எழுத்துக்கள் மற்றும் எழுத்தை குறித்து விமர்சிக்கிரவர்களோடு அதிகாரத்தோடு பேசக்கூடிய பிரசித்தி பெற்ற நபர். புத்திய ஏற்பாட்டு எழுத்துக்களை குறித்த ஆய்வுகளின் மையத்தின் தலைவராக இருக்கிறார். அவருடைய தமது ஓய்வு நேரங்களில் NET பைபிளின் புதிய ஏற்பாட்டின் மூத்த ஆசிரியராகவும் பணியாற்றுகிறார். மேலும் சில புத்தகங்களை எழுதியிருக்கிறார், "ஸ்டாண்டர்ட் கிரேக் பியாந்த் த பேசிக்க்ஸ், எக்சீஜெடிகள் சின்டக்ஸ் ஆப் தெ நியூ டெஸ்ட்மன்ட். இவர்கள் பிரசித்தி பெற்ற நபர்கள்.

டேன், உங்ககிட்ட இருந்து ஆரம்பிக்கிறேன். ஆதிகால கிறிஸ்தவர்கள் எந்த புத்தகத்தை புதிய ஏற்பாட்டின் தொகுப்பிற்குள் இணைப்பது என்பதை எப்படி தீர்மானித்தனர்?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இது மிகசிறந்த கேள்வி, ஜான். எதை சேர்க்கணும் எதை சேர்க்க கூடாது என்று அவர்கள் யோசித்துகொண்டிருந்தபோது மூன்று விஷயங்களை அவர்கள் மையப்படுத்தினார்கள் என்றுதான் நினைக்கிறேன். முதலாவதாக அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டதா, அல்லது ஆதிகால முதலாக இருக்கின்ற ஒன்றா. அப்போஸ்தல தன்மை என்றால் அப்போஸ்தலர்களால் அல்லது அவர்களுடைய சீடர்களால் எழுதப்பட்டிருக்கலாம்? ஆனா ஆதிகாலம் என்ற எண்ணத்தை வைக்கும்போது, இது கிபி நூறாம் ஆண்டிற்கு முன்பு எழுதப்பட்டு இருக்கவேண்டும். அவை அனைத்தும் அப்போஸ்தலர்களின் உதியாளர்கள் அல்லது ஒரு அப்போஸ்தலன், அல்லது துவக்கத்தில் இருந்த கிறிஸ்தவர்களின் சாட்சிகள் அலது இரண்டாம் தலைமுறை கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டு இருக்க வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இல்லாவிட்டால் அதற்கு உரிய வரவேற்ப்பு இருக்காது.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இல்லைன்னா அதற்கு போதிய மதிப்பு இருக்காது. சில மேதைகளுடைய கருத்துப்படி இந்த கேனன் தொகுப்பானது சுமார் நான்காம் ஐந்தாம் ஆறாம் தலைமுறை வரைக்கும் தீ ர்க்கமாக தொகுக்கப்படவில்லை, அதாவது இவ்வளவுதான் என்று சொல்லப்படவில்லை, இந்த இருபத்தி ஏழு புத்தகங்கள் மட்டும் போதுமானது என்று யாரும் இருபத்தி ஏழு என்ற என்னை குறிப்பிடவில்லை. சரி, இதனால் பழக்கமில்லாத ஒரு வாசகர் இதை வாசிக்கும்போது தாக்கம் வேறுபட்டு இருக்கும், ஓ, அப்படின்னா ஒருவேளை தோமாவின் சுவிசேஷத்தை வாசிக்க கூடும், மரியாளின் சுவிசேஷம், பிலிப்புவின் சுவிசேஷம், பேதுருவின் சுவிசேஷம், அதாவது இதெல்லாம் சுமார் இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பதிவுகளாக இருக்கிறது. சில அப்போஸ்தல பிதாக்கள் எழுதியவைகளை அவர்கள் இந்த தொகுப்புகளில் சேர்த்து இணைத்திருக்கிறார்கள்.

ஆனால் அது உண்மை அல்ல. ஒரு உண்மையான விஷயம் என்னவென்றால் சபை ஆதிகால அப்போஸ்தலர்களுடைய தொகுப்புகளில் அதின் பதிப்புகள் இருப்பதை புரிந்துகொண்டார்கள். அதில் முரடோரியன் பிரிவு இருக்கும், அதை பற்றி சில நிமிடங்களில் விளக்கி சொல்கிறேன், ஆனா இந்த முரடோரியன் பிரிவு என்ன சொல்கிறதென்றால், "எங்களுடைய காலத்தில் தான் ஷ்ப்பர்ட் ஆப் ஹெர்மஸ் எழுதப்பட்டது. அதில், எங்களுடைய காலத்தில், என்று சொல்லப்பட்டு இருப்பது இரண்டாம் நூற்றாண்டை குறிக்கிறது. அவர் சொல்கிறார், இது ஒரு அருமையான புத்தகம். உண்மைதான். அப்போஸ்தல பிதாக்களில் ஒருவரால் எழுதப்பட்டது.

அருமையான புத்தகம், பக்திவிருத்தி உண்டாக்கும், ஆனால் அதை சபையில் வெளிப்படையாக வாசிக்க முடியாது ஏன்னா நான் சொன்ன புத்தகங்களை போல இதற்கு அதே மாதிரியான அடையாளம் அதிகாரம் கிடையாது. அதனால கிபி 100 மறுபடியும் அடையாளங்கள் மாற்றப்பட்டது, இது கேனன் தொகுப்புகளில் ஒன்றாக இருபதற்கு சாத்தியமில்லை.   கிபி 100ம் ஆண்டிற்கு முன்பு சாத்தியமாக இருந்தது.

இரண்டாவது காரியம் என்னவென்றால் கத்தொளிக்கத்துவம் அதாவது இது ரோமன் கத்தோலிக்கத்தை குறிப்பது இல்லை, உலகளாவிய முறையத்தான் குறிக்கிறது. இந்த புத்தகத்தை உலகமெங்குமுள்ள சபைகள் ஏற்றுக்கொண்டு இருக்கின்றன அப்போஸ்தல கால பாரம்பரியங்கள், பேராயர்களுக்கு போதிப்பது, அவர்கள் தொடர்ந்து மற்ற பேராயர்களுக்கு போதித்தல் என்று தொடர்ந்து வருகிறது. அதாவது, “இதெல்லாம் அவர்களை தான் சென்றடையும் என்று எங்களுக்கு தெரியும். இதுதான் ஆர்தடாக்சி என்று சொல்லுகிற கட்டம் வருமென்று தெரியும். இதெல்லாம் அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்களுடைய நண்பர்களோடு தான் முடிவு பெரும். இந்த புத்தகமானது வசனம் என்றால் என்ன என்பதை நமக்கு தெள்ள தெளிவாக எடுத்து காட்டுகிறது.”

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஒன்றை நாமும் புரிந்துகொள்கிறோம் இரண்டாம் நூற்றாண்டில், உண்மையாக, இதை குறித்து அவர்கள் கருத்தாக செயல்பட்டனர். இதை தான் அவர்கள் முன்வைக்கிறார்கள்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ஆமா. அவர்கள் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாதி அவர்கள் அப்போஸ்தலர்களின் அதிகாரத்தை குறித்து அதிக கரிசனையோடு இருந்தனர். அவர்கல்புதிய ஏற்பாட்டை வசனங்களாக பார்க்க வேண்டும் என்ற சத்தியத்தை அவர்கள் புரிந்துகொண்டார்களா என்று உறுதியாக தெரியவில்லை. இந்த காரியம் முற்றிலும் மாறுபட்டது அதை பற்றி பிறகு பார்க்கலாம், என நினைக்கிறேன். ஆனா இந்த பதிவுகளின் அங்கீகாரம் என்று பார்க்கும்போது, உலகமுழுதும் உள்ள சபைகளால் ஏற்றுகொள்ள பட்டவைகளை மட்டுமே இணைக்கும்படியான நிலை இருந்தது. மூன்றாவது காரியம் என்னவென்றால், அது ஆர்தடாக்சாச இருக்கவேண்டும். அதாவது, இயேசுவை குறித்த சத்தியங்களை கூறிடும் நமக்கு தெரிந்த மற்ற புத்தகங்களோடு இவை உறுதி செய்வதாக இருக்கவேண்டும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டேரல்?

**Dr. டேரல் பாக்:** சரி, இந்த மூன்றாவது விதத்தை குறித்து ஒரு காரியம் முக்கியமானதென்று நினைக்கிறேன், இது ஆர்தடாக்சாக இருக்கவேண்டும், ஆர்த்தடாக்சி என்பது உங்கள் போதனையின் மையக்கருத்தை சார்ந்தே இருக்கிறது, முந்தைய நிகழ்சிகளில் நாம் ஏற்கனவே பார்த்தது போல சபையை நடத்தி செல்லும் விதத்தை குறிப்பதாக இருக்கிறது. அதாவது, பள்ளிகள் மூலமாக, உபதேச அறிக்கைகள் மூலமாக இருக்கலாம், பாடல்கள் மூலமாக, பாடுவதன் மூலமாக, சடங்காசாரங்கள் மூலமாக இருக்கலாம். விசுவாசத்திற்கு சில விதிகள் உள்ளது. நாம் இந்த பதங்களை உபயோகிப்போம் இல்லையா, “விசுவாசத்தின் விதிகள். விசுவாசத்திற்கு சில விதிகள் இருக்கிறது, இந்த புத்தகங்கள் அதன் அடிப்படையில் தான் இருக்கிறது. நிறைய புத்தகங்கள் இறுதியில் கேனனில் இடம்பெறவில்லை, அவை அங்கீகரிக்கப்படவில்லை,

இந்த விசுவாசத்தின் விதிகளில் அதில் பிரச்சனை இருந்தது. விசுவாசத்தின் விதியினால் அவர்கள் போராடிக்கொண்டு இருந்தனர். அதினால் அவர்களுடைய மையக்கருத்துகளினால் நிராகரிக்கப்பட்டனர்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இந்த விஷயத்தை சற்று கவனிக்கலாம். சில புத்தகங்களை ஆர்தடாக்சாக இல்லாதபடி செய்தது எது, இந்த புத்தகங்களை தவிர மற்ற புத்தகங்களை கிறிஸ்தவர்கள் நிராகரிக்கும்படி செய்திட அவர்களின் நம்பிக்கையின் மையபொருளாக இருந்தது என்னது?

**Dr. டேரல் பாக்:** சரி, நம்பிக்கையின் மையபொருளாக இருந்தது தேவன் சிருஷ்டிகராக இருக்கிறார் என்ற கருத்து தான்; அந்த சிருஷ்டிப்பு நல்லதாக இருந்தது, இயேசு முழுதும் மனிதராகவும் முழுவதும் தேவனாக இருந்தார் என்பதாகும்; அந்த சிருஷ்டிப்புகளுக்கு தேவை யான ஒன்றாக இருந்தது மீட்பு அது வெறும் ஒரு நபருக்கு மட்டுமல்ல, அவர்களுடைய ஆத்துமாவிற்கு மட்டுமல்ல, ஆனால் எல்லாவற்றிற்கும் முழுவதற்கும் தேவையாக இருந்தது. சிருஷ்டிப்பில் மாம்சப்பிரகாரமான ஒரு மீடிப்பின் செயல் வேண்டியதாக இருந்தது. சிருஷ்டிப்புகள் மீட்ப்பிர்க்காக கதறிக்கொண்டு இருக்கின்றன. ரோமர் எட்டாம் அதிகாரத்தில் ஒரு அருமையான வசனம் சொல்லப்பட்டு இருக்கிறது சிருஷ்டியானது மனுஷ குமாரர் வெளிப்படும் நாளுக்காக காத்துகொண்டு இருக்கிறது. அதனால இந்த இரட்சிப்பானது முழு சிருஷ்டிப்புகளுக்கும் அவசியமாக இருக்கிறது என்பதை மறுக்க முடியாது. உயிர்த்தெழுதலில் மாம்சம் இடைபட்டு இருக்கவேண்டும், அதாவது அது ஆத்துமாவின் அழியா தன்மை என்றோ அல்லது இதற்கு இணையாக எதையாகிலும் சொல்ல முடியாது. அதனால் சில அதிகப்படியான வேதாகம காரியங்கள் சிருஷ்டிப்பின் துவக்கத்தை தவறாக வர்ணிக்கிறது, அதாவது சிலவற்றிற்கு தேவன் நேரடியாக பொறுப்பாக இல்லை சிலவற்றிற்கு மட்டுமே அவர் பொறுப்பாளராக இருக்கிறார். அதாவது இயேசு சில வேலைகளில் முழுமையாக மனிதனாக இல்லை என்கிறது. பொதுவாக ஆதி திருச்சபையில் இருந்த பிரச்சனை இயேசு தெய்வீகமானவர் என்று நம்புவதில் உண்டாகவில்லை, சுவாரசயமான விஷயம் என்னன்னா, இயேசு முழுமையான மனிதனாக இல்லை என்பதில் இருந்தது. அதாவது, அவர் மணலில் தமது காலதடத்தை பதித்தார், ஆனால் அது ஒரு தடயமாக இருந்தது. அவருடைய ஆத்துமா...

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** அல்லது அவர் மணலில் தனது கால்தடத்தை பதிக்காமல் இருந்ததிருக்கலாம்.

**Dr. டேரல் பாக்:** அதுவும் சரிதான், அல்லது அவர் கடலோரமாக நடந்திருக்கலாம் அவருடைய கால்தடையங்கள் காணாமல் போயிருக்கலாம். அவர் சிலுவையில் மரித்தபோது அவருடைய மனித சரீரத்தில் இருந்து அவருடைய பிரசன்னம் விலகியது, அதினால் அவர் அதிகமாக உபத்திரவப்பட்டார். அப்படி ஏதாவது ஒரு காரியம் நடந்தால், நீங்கள் அதற்கு விலகியிருப்பீர்கள். அவர்களுடைய எண்ணம் என்னன்னா உயிர்த்தெழுதலில் சசீரத்திற்கு எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதாகும். அப்படின்னா வெளியில் இருப்பீங்க. அதனால் இந்த புத்தகங்களின் சில சாராம்சங்களால் இவை புறக்கணிக்கப்பட்டது, ஏன்னா அதற்கு முன்பாகவே சபையானது சில போதனைகளை நிலைபடுத்தி வைத்திருந்தது, பல விஷயங்களில், இந்த புத்தகங்களில் எழுதப்பட்ட

காரியங்கள் தொடர்ந்து முன்புள்ள பதிவுகளில் இருந்து வந்ததாகும். அது என்ன வென்று அவர்களுக்கு தெரியும், அதனால அவங்க இது பொருத்தமாக இல்லை என்று கூறினார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். இது எனக்கு பிடித்திருக்கிறது. இப்ப உண்மை என்னன்னு பார்க்கலாம், இந்த புத்தகங்கள் எப்போது சேர்க்கப்பட்டது? சுவிசேஷங்களை குறித்து நிறைய சொல்லப்பட்டு இருக்கிறது, நான்கு சுவிசேஷங்கள். உங்களுக்கே தெஇர்யும் டேன் பிரவுனுக்கு தி டாவின்சி கோடில் பல சிக்கல்கள். இருந்தது – சுமார் என்பது சுவிசேஷங்கள் இருந்தது, வெறும் நான்கு மட்டும்தான் தேர்வானது, இதில் சில குழப்பங்கள் இருந்தது, அது இது என்று சொல்லிகொண்டார்கள். உண்மை என்ன, வரலாற்றில் உண்மையாக என்ன நடந்தது என்று மார்க்கலாம். எப்போது ஆதி திருச்சபை புரிந்துகொள்ள துவங்கியது, இந்த நான்கு சுவிசேஷங்கள் தான் சேர்க்கப்பட வேண்டிய நான்கு சுவிசேஷங்கள் என்பதை எப்படி அறிந்துகொண்டார்கள்?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** நீங்க டேன் பிரவுனின் என்பது பட்டியலோடு ஆரம்பிக்க விரும்பினாலும், இந்த எண்ணிக்கை எப்படி கிடைத்தது என்று எனக்கு தெரியவில்லை. ஒரு காரணத்தினால், அன்றைக்கு புழக்கத்தில் இருந்தது மொத்தம் எத்தனை சுவிசேஷங்கள் என்று நமக்கு தெரியாது. இருந்தாலும், அவர் என்ன சொல்லுகிறார் என்றால் இதுவும் ஆதிகாலத்தி சேர்ந்ததாக இருக்கிறது, ஆனால் அது அப்படியில்லை. பதிவுகள் என்று பார்க்கும்போது முதலாம் நூற்றாண்டில் இருந்த கேனான் தொகுப்பு வடிவிலான சுவிசேஷங்கள் தான். அதற்கு பிறகு சில சுவிசேஷங்கள் இரண்டாம் நூற்றாண்டு துவங்கி மூன்று முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்டு வந்தது. மேலும் இந்த எல்லா பதிவுகளை கணக்கிட்டால் இரண்டு முதல் ஒன்பது வரை, பதினோராம் நூற்றாண்டு வரைக்கும் இருந்தது என்றிடலாம் – பொய்யான மத்தேயு ஒன்பதாம் நூற்றாண்டில் உண்டானதென்று தெரியும் – அப்படி பார்த்தால் நாற்பத்தி ஐந்துமுதல் அறுபது சுவிசேஷங்கள், என்று சொல்லலாம் என நினைக்கிறேன். இதெல்லாம் பிற்பாடு உண்டானது. அதை தான் கவனிக்க வேண்டும். சரி, என்னுடைய விவாதத்தில் முதல் குறிப்பு இதுதான், நம்மிடம் இருந்த ஆதிகால ஆவணங்களை மட்டும் நாம் பார்க்கலாமே, அதுதான் நான்கு சுவிசேஷங்கள்.

நிறைய பேர் கவனிக்காமல் இருக்கும் ஒரு விஷயம் என்னவென்றால் இன்றைக்கு நமது கரங்களில் இருக்கும் விதமான புத்தகங்கள் எல்லாம், இடதுபக்கம் திருப்பி வாசிக்கும் முறையில் உள்ள புத்தகங்கள், இதை கோடெக்ஸ் என்போம். இவை முதல் நூற்றாண்டின் கடைசி சில வருடங்களில் உண்டானது. இதை முதன்முதலில் பிரபலப்படுத்தினவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதை திடமான ஆதாரங்கள் இருக்கிறது அதிலிருந்து தான் எல்லாம் துவங்கியது. கிபி முதல் ஐந்து நூற்றாண்டுகளுக்கு, கிறிஸ்தவர்களின் புத்தங்களில் என்பது சதவிகிதம் இந்த முறையில் தான் உள்ளது, மீதமுள்ள இருபது சதவிகிதம் உலகத்தின் மக்களுடைய புத்தகங்களில் பயன்படுத்தப்படுகிறது. அதனால் கிறிஸ்தவர்கள் தான் மற்றவர்களை விட மிக அதிகமாக இம்முறைகளை இதுவரை பயன்படுத்தி வருகிறார்கள். சிலர் இதை அங்கீகரித்து இருக்கிறார்கள் அதாவது கோடக்ஸ் வடிவத்தில் நிறைய புத்தகங்களை சேர்த்து இணைத்திட வாய்ப்பிருக்கிறது இதுவே ஒரு சுருளாக இருந்தால் ஒரே ஒரு புத்தகம் ந்மட்டும்தாம் லூக்கா போன்ற ஒரு புத்தகம் மட்டும்தான்

இருக்க முடியும். அதில் நான்கு சுவிசேஷங்களை வைக்க முடியாமல் இருக்கும். ஆகவே ஆதிகால கிறிஸ்தவர்கள் இந்த கோடக்ஸ் முறையை பயன்படுத்திட காரணம் நான்கு சுவிசேஷங்களையும் ஒன்றாக சேர்த்திட வேண்டும் என்பதுதான். அதனாலதான் உங்களால் இந்த எல்லா நூல்களையும் பிரித்து வைத்து அதின் சாராம்சங்களை பெற முடிகிறது, "இந்த புத்தகங்களை நாம் அதிக பொக்கிஷமாக விலையேறப்பெற்ற பரிசாக காண்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அப்போஸ்தலர்கள் என்பதில் இருந்து நீங்க கடந்துசெல்லும்போது எந்த விஷயங்கள் தனித்து நிற்கின்றன, அவர்களுடைய மாணவர்கள், அவர்களுடைய மாணவர்கள் மாணவர்களின் மாணவர்கள். அதற்கு பிறகு இந்த சபை தலைவர்கள் தோன்றினார்கள் இவர்கள் எல்லாரும் ஒரு நிலையான உபதேச நம்பிக்கையை முன்வைக்கிறார்கள். நமக்கு வெறும் நான்கு சுவிசேஷங்கள் தான் இருக்கிறது என்று இந்த நான்கு சுவிசேஷங்களை புரிந்துகொல்லும்விதமாக அவர்கள் என்ன சொன்னார்கள்?

**Dr. டேரல் பாக்:** சரி, இரண்டாம் நூற்றாண்டில் என்ன நடந்துது என்றால். இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தை பார்க்கும்போது, இப்போது நாம் அப்போஸ்தல பிதாக்களை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம், முதலாம் கிளமண்டில் இருந்து துவங்குகிற தலைமுறை, அதாவது, அப்போஸ்தலர்களுக்கு கீழிருந்து கற்றுகொண்டவர், ஆனால் இவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல, அடுத்ததாக ஜஸ்டின் மார்டர், இவர் முதல் கிறிஸ்தவ விசுவாச தர்க்காப்பாளராக அழைக்கப்படுபவர். அந்த புத்தகங்களை குறிக்கிற அப்போஸ்தல பிதாக்களின் பட்டியல் தொகுப்புகள் இருக்கிறது. இவர்கள் அனைவரும் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பகுதியின் முற்பகுதியை பிரதிபலிக்கிறார்கள். அவர்களுடைய பணிகளை பார்த்து நீங்க கேட்கலாம், எப்போது இந்த புதிய ஏற்ப்பாட்டின் புத்தகங்கள் எல்லாம் முடிவிற்கு வந்தது, எவ்வளவு நாள் இடைவெளியில் செய்தார்கள்? அதற்கான பத்தி, நீங்க நினைக்கிற விதமான இடைவெளிகளில் அல்ல. அவர்கள் அவ்வளவு எளிதாக அதை கண்டடையவில்லை.

சரி, நாம் புதிய ஏற்பாட்டில் பார்க்கிறது போல நிறைய விஷயங்கள் இருக்கிறது உண்மைதான், அதில் சிலவற்றை சில நேரங்களில் சொல்ல முடியாது, நாம் வேதாகம புத்தகத்தை பிரதிபளிக்கிரோமா அல்லது நாம் வேதாகம புத்தகத்தின் பாரம்பரியத்தை பிரதிபளிக்கிரோமா? அப்படிப்பட்ட காரியம்தான் இருக்கிறது. இதை அதிகமாக குழப்பிவிட கூடாது, ஆனால் இன்னும் மக்கள் சரியானதை கண்டறியவில்லை என்றே சொல்லலாம், அவர்கள் இறையியலை தான் முன்வைப்பவர்களாக இருக்கிறார்கள். முதலில் ஜஸ்டின் மார்டர் அடுத்தது இரேனியஸ். இதுல என்ன நடந்தது எண்டால் மற்ற அமைப்புகள் முதலில் இருந்து துவங்க வேண்டியிருந்தது. மற்ற அமைப்புகள் ஆரம்பத்திலிருந்து துவங்கவேண்டியிருந்தது, அவர்கள் தாங்களாகவே சில புத்தகங்களை எழுதி அதை இறையியலின் அமைப்பாக மாற்ற முயன்று அதை அதிகாரமுடையதாக மாற்றி தங்கள் கருத்தை இறையியலாக்கினார்கள். அதனால ஒரு விஷயத்தை கேட்க்க பழகனும், யார் உண்மையாக செயல்பட்டனர் யார் செயல்படாமல் இருந்தனர்? அப்ப இந்த மாதிரியான விவாதங்கள் துவங்கும்போது நாம் விசுவாசிக்கிரவைகளை

பிரதிபலிக்கும் புத்தகங்கள் எது என்பதையும் நாம் ஆராயவும் தெரிந்துகொள்ளவும் துவங்கிடுவோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம், நாம் திரும்ப வந்ததும் இதை தொடர்ந்து பார்க்கலாம் அதில் நீசியாவின் ஆலோசனை சங்கத்திற்கு அதற்கு பிறகு அத்தேநேசியசின் கால வரையறைகளை பற்றி எங்களுக்கு சொல்லுங்கள், “இவ்வளவுதான் என்று இவர்தான் சொன்னார். நம்மிடம் இருக்கும் இந்த புத்தகங்களை அவர்கள் எங்கிருந்து பெற்றார்கள், எப்படி வகையருத்தார்கள், இவ்வளவுதான் என்று எப்படி முடிவெடுத்தார்கள், சரியா? இவ்வளவு தான் என்பதில் எவ்வளவு சீக்கிரம் சில புத்தகங்கள் இடம்பெற்றன. ஆல்ரைட், நாம் திரும்ப வரும்போது இவைகளை பற்றி பார்த்திடலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. உலகின் பிரசித்திபெற்ற இரு மேதைகளோடு நாம் உரையாடிக்கொண்டு இருக்கிறோம், Dr. டேரல் பாக் மற்றும் Dr. டேனியேல் B. வேல்லேஸ். மிக முக்கியமான கேள்வியை குறித்து பார்த்துகொண்டு இருக்கிறோம், இந்த உலகத்தில் இன்றைக்கு நம்மிடம் இருக்கிற இந்த புதிய ஏற்ப்பாட்டின் தொகுப்பு எப்படி கிடைக்கப்பெற்றது, எதை எடுக்க வேண்டும் என்று ஆதிக்கால கிறிஸ்தவர்கள் எப்படி தெரிந்துகொண்டார்கள்? இந்த தகவல்கள் அனைத்தும் அப்போஸ்தலர்களிடமிருந்தும் அவர்களோடு கூட இருந்தவர்களிடம் இருந்தும் பெற பெற்றனர், ஆனால் ஏதோவொரு கட்டத்தில் அவர்கள் இவ்வளவுதான் இதுமட்டும்தான் என்று கூறினார்கள், அதினால் இந்த கேனன் உருவானது, கிறிஸ்தவர்கள் பற்றிகொள்ளும் அதிகாரப்பூர்வமான புத்தகம். மற்றவை இவற்றோடு சேர்ந்தவை அல்ல என்று சொல்வதற்கு சில முறைகள் இருக்கிறது, ஆல்ரைட்? அதை பற்றி சொல்லுங்க. எப்படி இவைகள் இதற்குள் இணைந்தது? இதை குறித்து வரலாற்றில் இருந்து சொல்லப்படும் சுவடுகள் என்ன?

**Dr. டேரல் பாக்:** சரி, முதலில் இந்த காரியங்களை சிறப்பாக பார்த்து செயல்பட துவங்கிய ஜஸ்டின் மார்டரில் இருந்து துவங்கிடலாம், இதிலிருந்து தான் துவங்கியது என்பதில் எந்த விவாதங்களும் கிடையாது, சரி. கிறிஸ்தவத்தை தர்க்காக்கும்போது அவர் தமது விவாதத்திற்கு மெருகேற்ற இதை பயன்படுத்தினார். அதற்கு அடுத்ததாக டைடியன் வருகிறார். எனக்கு டைடீயனை பிடிக்கும். டைடீயன் சிறந்த கருத்துக்களை கொண்டிருந்தார். அவர் சொன்னார் நான்கு சுவிசேஷங்கள் இருப்பது மிகவும் குழப்பமாக இருக்கிறது. எல்லாத்தையும் ஒரே கதையாக சொல்லக்கூடாதா என்றார். ஒரே ஒரு பெரிய சுவிசேஷத்தை உண்டாக்கிடலாம் அதை நாம், அதாவது, அதை நாம் நான்குநூல்கள் என்றிடலாம் என்றால். சரி, அது எல்லாருக்கும் அர்த்தமற்றதாக தொண்டிர்யது, ஏன்னா யாருக்கும் லத்தீன் மொழி தெரியாது. உங்களுக்கு லத்தீன் தெரிந்திருந்தால், நான்கும் தெரியும் என்று அர்த்தமாகும். அவர் என்ன செய்தார் என்றால், நான்கினுடைய சாராம்சத்தை ஒன்று இணைத்து , அதோடு சிலவற்றையும் சேர்த்து, ஒரே தொகுப்பாக அமைத்தும் சபைகளில் ஒரே முறையில் எல்லாவற்றையும் சுவிசேஷ கதைகளாக சொல்லி முடிக்கும் அளவிற்கு தயாரித்து வழங்கினார். அது எல்லாவற்றையும் எளிமையக்கினது. மேலும் அவை சில இடங்களில் பயன்படுத்தப்படும்படி உபயோகிக்கப்பட்டு சபைக்கு முக்கியமானதாக கருதபப்ட்டது, அது நான்கு சுவிசேஷங்களை பூர்த்தி செய்திடவில்லை.

ஏன்? ஏன்னென்றால் நான்கு சுவிசேஷங்களும் மாற்று புத்தகம் இல்லாதபடி தொகுத்து அளிக்கப்பட்டு இருந்தது. இதெல்லாம் 170களில் இருந்தது.

180ள் இரேனியசின் எழுத்துக்கள் வெளிவந்தது. வெறும் நான்கு சுவிசேஷங்கள் தான் இருக்கிறது என்றார். அதோடு முடிந்துவிட்டது. அதனால இரண்டாம் நூற்றாண்டின் இறுதியை அடைவதற்கு முன்பு, கேனானின் முக்கிய பகுதிகள் தீர்மானிக்கப்பட்டு விட்டது. அதாவது, சிலநேரங்களில் ஜனங்கள் கேட்ப்பார்கள், “நான்காம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரைக்கும் கேனானின் புத்தகங்கள் தீர்மானிக்கப்படவில்லை இல்லையா.” உண்மைய சொன்னா அதுவும் சரிதான், ஆனா தவறான கண்ணோட்டம் இருக்ககூடாது. ஏன்னா புதிய ஏற்பாட்டின் இருபது அல்லது இருபத்தி ஓரு புத்தகங்கள், இரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்குள் நமக்கு, அதினதின் இடத்திற்கு வந்துவிட்டது. நம்மிடம் நான்கு சுவிசேஷங்கள் இருக்கிறது, அப்போஸ்தல நடபடிகள், பவுலினுடைய பல நிருபங்கள் உள்ளது, அப்போது ஒன்று பேதுருவும் இருந்தது. இதையெல்லாம் ஒன்றாக சேர்க்கும்போது இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலேயே பெரும்பாலான புத்தகங்கள் கிடைத்துவிட்டது.

அதற்கு பிறகு மீதமுள்ள ஆலோசனைகள் தான் நான்காம் நூற்றாண்டின் மத்திய காலம் வரைக்கும் நடந்துகொண்டே இருந்தது சில புத்தகங்களை  குறித்த  விவாதங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது, ஏன்னென்றால் அவர்களுக்கு அதை பற்றிய சில கேள்விகள் இருந்தது. சிறிய புத்தகங்கள், அல்லது வித்தியாசமாக இருக்கிறது, வெளிப்படுத்தல் போன்ற புத்தகங்களை சொன்னார்கள். சின்னது பிலேமோன், யூதா, 2 பேதுரு. 2 பேதுருவும் யூதாவும் கிறிஸ்தவ தற்காப்பு புத்தகங்கள், அதனால் அது வித்தியாசமானது. அதனால் இதை சரிபடுத்த கொஞ்சம் அவகாசம் தேவை பட்டது. அதோடு இதில் இணைக்கப்படாத சில புத்தகங்கள் என்னவென்றால்: 1 கிளமெண்ட், தி டிடேகி, ஹெர்மசின் மேய்ப்பர்கள், இவற்றை ஒரு கட்டத்தில் சிலர் அதிக அங்கீகாரமுடையதாக எண்ணிக்கொண்டு இருந்தார்கள், ஆனால் மற்ற புத்தகங்களுக்கு கிடைத்த பெரும்பான்மை தரம் இவைகளுக்கு கிடைக்கவில்லை. அதனால் இப்போது 367ஆம் வருடங்களில் இருந்தோம். அதேநேசியஸ் எழுத்தான பிஸ்டல் கடிதம் என்பதில், அவர் இருபத்தி ஏழு புத்தகங்களை கூறியிருந்தார். அவரி அனைத்தும் மறுபடியும் நான்காம் நூற்றாண்டின் இறுதியிலும் ஐந்தாம் நூற்றாண்டின் துவக்கத்திலும் ஆலோசனை சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு  பிரகடணிக்கப்பட்டது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். மறுபடியும், ஒரு விஷயம். உண்மையில் நாம் இந்த நிகழ்ச்சியின் தொடரை துவங்கியபோது, இயேசு இருந்தார் என்று நாம சொன்னோம், அவர் 12 பேரை தேர்வு செய்தார், அவர்கள் தான் அபோச்தளர்கள். அவர்கள் இயேசு கல்லறையில் வைக்கப்பட்டு ஐம்பது நாட்களுக்கு பிறகு பெந்தேகோஸ்தே நாளில் பிரசங்கித்தனர்.  அவர்கள் ஜீவனுள்ள அப்போஸ்தலர்களாக இருந்தார்கள், அவர்கள் நிருபங்களையும் புத்தகங்களையும் எழுதினார்கள். ஆல்ரைட் சரி, இப்போது நமது கரங்களில் இருக்கும் இந்த கேனனில் இருப்பவைகளை எப்படி பெற்றோம், புதிய ஏற்ப்பாடு அதேநேசியஸ் சொல்கிறார், இவ்வளவு தான், முடிஞ்சுது,

இதற்கு பிறகு எதுவும் இல்லை, நீங்க சொல்கிற இந்த காரியங்கள் அனைத்தும் இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னதாகவே வந்துவிட்டதாக சொல்லுகிறீர்கள்.

**Dr. டேரல் பாக்:** கான்ஸ்டன்டைன் காலத்திற்கு முன்பே வந்துவிட்டது. அதுதான் ரொம்ப முக்கியம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இதுதான் முக்கியமான குறிப்பு. ஆனா உண்மையில், இந்த புத்தகங்களின் தொகுப்புகளை பார்க்க வேண்டும். இதை சொல்லும்போதும் முன்மையில் ஆச்சரியமாக இருக்கிறது. அதை பற்றி சொல்லுங்கள்.

**Dr. டேரல் பாக்:** சரி, திறவுகோல் காரணம், இதெல்லாம் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் அதினதின் ஸ்தானத்தில் நேர்த்தியாக செயல்பட காரணமாக இருந்தது இரேனியஸ். அவர் நான்கு சுவிசேஷங்களையும் விளக்கவுரையுடன் எழுதியிருக்கிறார், அவர் சொல்கிறார், ... நம்மால் முடியாத ஒரு விவாதத்தை அவர் முன்வைக்கிறார், தெரியுமா? அது ஒரு வியர்த்தமான விவாதம். அவர் என்ன சொல்கிறார் என்றால், நான்கு முனைகள் இருப்பது போல, உலகின் நான்கு காற்றுகள் இருப்பதுபோல, நமக்கு நான்கு சுவிசேஷங்கள் இருக்கிறது என்கிறார். ஆனால் விஷயம் இதுதான், இது எவ்வளவு அருமையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். இது இயற்கை போன்றது, சரியா? அதை தான் அவர் சொல்கிறார்.

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** ஏதோ புதிய விஷயத்தை அவர் சொல்லவில்லை. ஏதோவொரு வாக்கியத்தை வரியை அவர் சொல்ல முடியாது. அதற்கு பாரம்பரிய ரீதியுடைய ஒரு பதிவு இருக்க வேண்டும்.

**Dr. டேரல் பாக்:** அது சத்தியத்தோடு அல்லது மக்களோடு சம்பந்தப்பட்டு இருக்கவேண்டியது முக்கியம், "ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம். இல்ல, இது நான்கு மட்டுமல்ல. இன்னும் இருக்கு, அது ஐந்து அல்லது ஆறாக இருக்குமென்று நினைக்கிறேன்..." இல்ல, இந்த மாதிரியான விவாதங்களுக்கு அவர் விலகி இருப்பதற்கு ஒரே வலி அதில் உண்மையாக நடந்த சம்பவங்களுக்கான ஆதாரங்கள் இருக்க வேண்டும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இந்த இருபத்தி ஏழு புத்தகங்களும் ஒன்பது காரணிகள் மூலமாக வெளிவந்திருக்கிறது. அவை யாவை?

**Dr. டேரல் பாக்:** ஆமா. நம்முடைய புதிய ஏற்பாடு உண்டாகியிருப்பதற்கு 9 நபர்களுடைய ஒத்துழைப்பும் பங்கும் இருப்பதை மறுக்க முடியாது. அவர்கள் தான் மத்தேயு, மாற்கு, லூக்கா, இவர் லூக்கா மற்றும் அப்போஸ்தலரை எழுதியவர், யோவான்; சுவிசேஷத்தையும் வெளிபடுத்தலையும் எழுதியவர், யோவான் நிருபங்களையும் எழுதினார். சிலர் இது வேற வேற நபர் என்றாலும், பலர் இதெல்லாம் ஒருவர்தான் என்கின்றனர். அப்போஸ்தல புஸ்தகம் லூக்காவோடு இணைந்திருக்கிறது. அதனால இப்ப மத்தேயு மாற்கு லூக்கா யோவான் இருக்காங்க அப்போஸ்தலரும் லூக்காவோடு இணைகிறது. அடுத்தது பவுலுடையது. அடுத்ததாக யாக்கோபு இருக்கிறார். அடுத்தது எபிரேயர் இருக்கிறது, ஓரீஜன் சொல்வது போல, அதை எழுதியவரை தேவன் மாத்திரம் அறிவார். அடுத்தது பேதுரு இருக்கிறது. அடுத்த இருப்பது....

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** யூதா.

**Dr. டேரல் பாக்:** யூதா. யூதாதான் கடைசி, சரியா? இந்த 9 பேரும்தான் புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களை கொடுத்தவர்கள், என்கிறோம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இவர்கள் அப்போஸ்தலர்கள் மற்றும் அப்போஸ்தலர்களின் சீடர்களாக இருந்தவர்கள். இதைதான் விவாதத்தின் தீர்வாக இருக்குது.

**Dr. டேரல் பாக்:** முற்றிலும் உண்மை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இதுதான் சரி என்று மாணவர்கள் அறிந்துகொள்ளும் விதமாக இதனோடு நீங்கள் எதையெல்லாம் சேர்க்க முடியும், அவர்கள் சரியானதை தேர்வு செய்யவேண்டுமே?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இரண்டாம் நூற்றாண்டின் துவக்கம் முதல் இந்த புத்தகத்தினுடைய ஆக்கியோங்களை குறித்த விவாதம் தொடர்ந்துகொண்டே இருந்தது என்று நினைக்கிறேன். பாபியாசினுடைய ஆலோசனைகள் இருக்கிறது. இதற்கு அப்பாற்பட்ட நிலையிலான இரேனியசின் கலந்துரையாடல் இருந்தது. இக்னேஷியஸ் அப்போஸ்தலர்களை பற்றி பேசுகிறார். கிளமன்ட் பேசுகிறார். அந்த கலந்துரையாடல் அனைத்தும் இவர்கள் தான் இதை எழுதியவர்கள் என்று நமக்கு கூறுகிறது. புதிய ஏற்பாட்டு வசனங்களாக கருதப்படுவதற்கு முன்பே இவர்கள் எல்லாரும், ஆரம்ப நிலைகளில் இல்லை, இருந்தாலும் இவர்கள் சொன்ன கருத்து, “இதெல்லாம் அதிகாரமுடைய நபர்களால் எழுதப்பட்ட காரியங்கள். நாம் போராடிகொண்டிருக்கும் ஒரு காரியம் என்னவென்றால் இன்றைக்கு யாராவது நம்மிடத்தில் வந்து கேட்டால், அதாவது, வேதாகமத்தில் 66 புத்தகங்கள் இருக்கிறது, அதோட 67வதை கூட்ட விரும்புகிறேன் என்றால் என்ன செய்வது. இப்பதா நா இதை எழுதினேன். இதை நான் அச்சிட்டு வெளியிடகூடாதா? நாங்க நாதா மாதிரியான ஜனங்களை ஒருவேளை தனியே ஓரிடத்தில் ஒதுக்கிட வேண்டும் என்று நினைக்கிறேன், அடிக்கடி இதேமாதிரி சொல்லிகொண்டே இருப்பார்கள். ஆனா புதிய ஏற்பாட்டு ஆவணங்களை பார்க்கும்போது, அந்த மாதிரியான வாக்குகளை கேள்விபட முடியும். ஒரு சபை தனது கருத்தை சொல்ல எவ்வளவு காலம் எடுக்கப்போகிறது, “இன்றைக்கு எங்கள் கரத்தில் இருப்பது முழுமையான வேதத்தோடு இணைக்கப்பட்ட இணைப்பு, எபிரேய வேதத்தோடு இணைக்கப்பட்டது? இரண்டாம் நூற்றாண்டில் ஏற்க்கனவே அவர்கள் எபிரேய எழுத்துக்கள் முழுமையான பகுதிகள் என்று ஆராயந்துவிட்டனர். இப்போது புதிய ஏற்பாட்டின் பதிவுகள் கிடைக்கப்படுகிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், மறுபடியும், மாறுபாடான கேள்விகள் வருகிறது, அவர்களுடைய விருப்பப்படி வரலாற்றை பதிவு செய்யும் வலிமை அவர்களுக்கு இருக்கிறதா? உங்களுடைய பதில் என்னவாக இருக்கும்?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** இதை அதிகாரமுடையவர்கள் எழுதினார்கள் என்று சொல்வதற்கில்லை, ஆனால் இதை எழுதியவர்களுக்கு சத்தியம் என்னவென்று தெரியும் அதை சொல்லியிருக்கிறார்கள் அனுபவித்திருக்கிறார்கள், ஏன்னா அந்த செய்தியானது முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டமுடையதும் வாழ்க்கையை மாற்றியமைப்பதுமாக இருந்தது.

**Dr. டேரல் பாக்:** முக்கியமான காரியம் என்னவென்றால் அரசியல் அதிகாரம் ரோமர்களுக்கு வருவதற்கு முன்பு இந்த கேனானின் மைய கருப்பொருள் கிறிஸ்தவர்களால் எழுதப்பட்டது என்பதை புரிந்திருக்கவேண்டும். அதனால தான் இரண்டாம் நூற்றாண்டின் இறுதி நாட்கள் வரைக்கும் பார்த்துவிட்டு இரேநியசும் மற்ற எழுத்தாளர்களும், ஆர்தடக்சை தற்காத்து எழுதினார்கள். அவர்கள் பேராயர்கள். மிகப்பெரிய ஆலோசனை நடந்துகொண்டு இருக்கையில் இவர்கள் எல்லாரும் சபையில் மிகப்பெரிய அதிகாரத்தில் இருந்ததனர். ஆனால் எது விடாபிடியாக நிற்க செய்தது? சொல்லப்பட்ட காரியங்கள் அனைத்தும் உண்மை என்றும் இவை எல்லாம் திடமான பாரம்பரிய பின்னணியை உடையது என்றும் விடாபிடியாக உறுதியாக நிற்க செய்தது எது.இதில் ஆச்சரியமான காரியங்கள் இருப்பதை பார்க்கலாம். அதாவது, முந்தைய நிகழ்சிகளில் லூக்கா பவுலினுடைய குழுவில் ஒருவராக இருந்து இந்த சுவிசேஷத்தோடு இணைக்கப்பட முடியாது என்பதை நாம் பார்த்தோம், அப்படின்னா பவுலின் கூட்டத்தில் யாரைவேண்டுமானாலும் சேர்த்திருக்கலாம். பேதுருவோடு தொடர்புடைய நிருபங்க்லாய் எழுதியர் மார்க்கு என்று சொல்வதற்கு வாய்ப்பில்லை. எல்லாவற்றிற்கும் மேல், பவுளுடனான ஊழியத்தில் அவர் தோல்வியடைந்து வீடு திரும்புகிறார். அவர் வெளியில் வருகிறார், பிறகு பவுல் அவரை அடுத்த இடத்திற்கு கூடீட்டு போகல. நீங்க பொதுவாக ஒன்றை தெரிந்தேடுப்பீர்கள் என்றால், நிச்சயம் இவர்களை தெரிந்துகொள்ள மாட்டீர்கள். அதனால இந்த தொடர்பற்ற நிலைகளும் இருக்கிறது, நா சொன்னதுபோல, இவை, பாரம்பரியத்தை பற்றிய காரியத்தின் மையத்தில் இந்த தன்மையும் சில அசவுகரியங்க்ளும் இருக்கத்தான் செய்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இதை எல்லாத்தையும் சுருக்கமாக சொல்லுங்க, டேன்.

நா என்ன சொல்றேன்னா ஆதிகால திருச்சபை எழுத்தாளர்கள் இவை அனைத்தும் அப்போச்தலர்களாலும் அவர்களோடு இருந்தவர்களாலும் எழுதப்பட்டது என்பதை புரிந்துகொண்டார்கள், இரண்டாம் நூற்றாண்டில் உள்ள எதுவும் இதனோடு ஒத்துபோகிறது என்ற அதிகாரமும் இதற்கு இருந்தது. அதுமட்டுமல்லாமல் இவை அனைத்தும் கேனனோடு சேர்க்கப்பட்டிருக்கும் புத்தகங்களை என்பதை அவர்கள் புரிந்துகொண்டார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ரொம்பவும் பயங்கரமானது. இன்னும் ஒரே ஒரு விதம் தான் நம்மிடம் இருக்கும் என்று சொல்லலாம், அது என்னவென்றால், வேத பண்டிதர்கள் இந்த வாக்கியங்களால் தினரவில்லையா? பார்ட் எஹ்மேன் அவர்கள் இயேசுவை தவறாக கணித்தல் என்ற புத்தகத்தில் சுமார் நான்கு லட்சம் எழுத்துக்கள் காலப்போக்கில் மாறுபட்டு, வித்தியாசமாக சொல்லப்பட்டு இருக்கிறது என்கிறார். வெறும் 136, 000 வசனங்கள் தானா?

**Dr. டேனியேல் B. வால்லேஸ்:** 138,000 வார்த்தைகள்?

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அப்படின்னா, புதிய ஏற்பாட்டில் ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று மாறுபாடுகள் இருக்கிறது என்கிறீர்கள். அப்போஸ்தலர்கள் பயன்படுத்திய அந்த வார்த்தைதான் இருக்கிறது என்பதை எப்படி தெரிந்துகொள்வீர்கள்? அதுதான் நமது

அடுத்த வார தலைப்பு. சில அதிகாரிகளின் வாயிலிருந்தே அதை கேட்டிடுங்கள். தவறாமல் நிகழ்ச்சியை பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.